தீனின் ஆதார மூலம்

The Source of Religion

இறைவன் மனிதனை படைத்து ஒழுங்கு படுத்தும் நேரத்தில் இரண்டு அம்சங்களை மனிதருக்குள் பதித்தான். ஒன்று, அவனை படைத்து பாதுகாத்துக் கொண்டிருப்பவன் ஒருவன் இருக்கிறான் , அவனே யாவற்றிற்கும் அதிபதி என்று உணரும் ஆற்றல். இரண்டாவது, எந்த ஒன்றின் தன்மை அறிந்து அதில் எவை நல்லது எவை கெட்டது என்று அடையாளம் காணும் தன்மைக்கான உள்ளுணர்வு.

இதைத்தவிர மற்ற பல விசேஷ அம்சங்களை மனிதருக்குள் பதித்து வைத்திருக்கிறான்.. அவைகளை நினைவூட்டினால் அவன் வளர்ந்து வரும் கால கட்டத்தின் பல்வேறு நிலைகள்/நேரங்களில் அம்மனிதனின் சிந்தனைகளிலும் செயல்களிலும் வெளிப்படும். இவ்வாறே மேற்கூறப்பட்ட இரண்டு விஷயங்களும் அவனுள் பதிக்கப்பட்டிருக்கிறது.

மேல் கூறப்பட்ட இரு விசேஷ அம்சங்கள் உண்மையான தீனின் அடிப்படை ஆகும். இது மனிதன் பிறக்கும் போதே அவனுக்கு அருளப்பட்டது. பிறகு மனிதர்களுக்குள் சிலரை தன்னுடைய தூதர்களாக தேர்ந்தெடுத்தான். அவர்களுக்கு அவனுடைய செய்தியை கொடுத்தான். அவர்களை மற்ற மனிதர்கள் பக்கம் அனுப்பி, மக்களுக்கு அச்செய்தியை சேர்த்து விட வழி வகை செய்தான். இவர்களில் சிலரை ரசூல் என்றும் , பலரை நபி என்றும் சொல்கிறோம். இவர்கள் மனிதர்களிடம் வந்து, இறைவனால் மனிதருக்குள் வைக்கப்பட்டிருக்கும் அம்சங்களின் விளக்கங்களை நம்பிக்கைகளாகவும், கோட்பாடுகளாகவும், சட்டங்களாகவும் வகைப்படுத்தி விரிவாக எடுத்து சொல்லி , விளக்கங்கள் தந்து , அதனை அவர்கள் வாழ்க்கையில் கடைபிடித்து, மக்களுக்கு விளக்கி விட்டும் சென்றார்கள்.

மக்களிடையே இறைவனின் தூதர்களாக அனுப்பும் நடைமுறை முதல் மனிதனான ஆதம் (அலை) அவர்களிடமிருந்து துவங்கியது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிறைவு பெற்றது. நபிகள் நாயகத்திற்கு இறைவன் மூலம் வந்த செய்தியில் நீங்கள் தான் இந்த நபித்துவ தொடரின் கடைசி நபர் என்று சொல்லப்பட்டது. உங்களுக்கு பிறகு எந்த ஒரு ரசூலோ அல்லது நபியோ வர மாட்டார்கள் என்று தெளிவு செய்யப்பட்டது. ஆகவே உண்மையான மார்க்கம் என்பது நபிகள் நாயகத்திடமிருந்து மட்டுமே பெறப்பட்டதாகும். நபிகள் நாயகத்தின் சொற்கள் , அவருடைய செய்கைகள் மற்றும் அவர் முன்னிலையில் மார்க்க சம்பந்தப்பட்ட செயல்கள் மற்றவர்களால் செய்யப்பட்டு , அதை அவர் தடுக்காத விஷயங்கள் ஆகியவைகள் மட்டுமே மார்க்கமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மார்க்கத்தை கற்றுக் கொண்டு, நபிகள் நாயகம் (ஸல்) வாழ்ந்த காலத்தில் பின்பற்றினார்கள். நபிகள் நாயகத்திற்கு பிறகு இலட்சக்கணக்கான மக்கள் நபிகள் நாயகத்திடம் கற்றவர்கள் மூலமாக மார்க்கத்தை கற்று கொண்டு அவர்கள் வாழ்க்கைகளில் நடைமுறை படுத்தினார்கள். இதன் தொடர்ச்சி எப்போதும் துண்டிக்கப்படவில்லை. நபிகள் நாயகத்தை பின்பற்றுபவர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் இந்த மார்க்கத்தை கற்றும், கற்றுக் கொடுத்தும், பேச்சு மற்றும் எழுத்து வடிவின் வாயிலாக மற்றவர்களுக்கு எடுத்து சொல்லியும் அதன்படி செயல்பட்டும் அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பாய் கை மாற்றி விட்டும் இருக்கின்றனர். இப்போது நம் கையில் அது பாதுகாப்பாய் இருக்கின்றது.

எவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவனின் தூதர் என்று முதலில் நேரடியாக ஏற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டதோ இப்போது நம்மிடம் அதே வடிவில் பாதுகாப்பாய் இருக்கின்றது என்பதை உறுதியாக கூற முடியும்.

ஒவ்வொரு தலைமுறையிலும் உலகின் பல்வேறு பிரதேசங்களில் இதை நம்பும் இவ்வளவு பெரிய மக்களின் கூட்டம் தங்களின் பேச்சு ,எழுத்து மற்றும் செயல்களால் அடுத்த தலைமுறைக்கு கொடுத்ததை இவர்கள் அனைவரும் பொய் சொல்கிறார்கள் என்று சொல்லி விட முடியாது. இந்த முறைக்கு இஜ்மா அல்லது தவாதுர் என்று கல்வியாளர்களால் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்கு அங்கீகரிக்கப்பட்ட கருத்து ஒற்றுமை என புரிந்து கொள்ளலாம். நல்ல மனநிலையில் உள்ள அறிவாளிகள் ஒரு தலைமுறையிலிருந்து பின்னால் வரும் தலைமுறையினருக்கு எடுத்து செல்லும் இம்முறையை உறுதியானது என கூறுகிறார்கள்.

இந்த மார்க்கம் நம்மிடம் இரு வடிவங்களில் வந்து அடைந்திருக்கிறது

1. குர் ஆன்

2. சுன்னத்

இங்கு குறிப்பிடப்படும் குர் ஆன் என்பது தற்போது முஸ்லிம்கள் எதை குர் ஆன் என்று சொல்கிறார்களோ அதுவேயாகும். இறைவனின் தேவதூதர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலமாக நபிகள் நாயகத்திற்கு இந்த குர் ஆன் இறைவனால் அருளப்பட்டது. இந்த புத்தகத்தில் எந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டதோ அதே வார்த்தைகளும், அது எவ்வாறு இறக்கப்பட்டதோ அவ்வாறே நபிகள் நாயகத்தினால் திரும்ப திரும்ப அவர்களின் தோழர்களுக்கு படித்து சொல்லப்பட்டது. அதை கேட்டவர்கள் பலர் அதை மனப்பாடம் செய்தார்கள், எழுத தெரிந்தவர்கள் எழுதி வைத்துக்கொண்டார்கள். இவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தார்கள். அவர்களில் சிலர் ஒரு ஸூராவை மனப்பாடம் செய்தார்கள், சிலர் இரண்டு ஸூராக்கள் ,சிலர் பத்து ஸூராக்கள் ,சிலர் மொத்த குர் ஆனை மனப்பாடம் செய்து கொண்டார்கள்.அதற்கு அடுத்தடுத்த சந்ததியினர் அவ்வாறே மனப்பாடம் செய்தார்கள். முஸ்லிம்களின் ஒவ்வொரு சந்ததியினரும் இவ்வாறே செய்து வருகிறார்கள். தற்சமயம் முஸ்லிம்களின் ஒவ்வொரு வீட்டிலும் அச்சடிக்கப்பட்ட குர் ஆனின் பிரதிகள் உள்ளன. அதே சமயம் தற்போது உலக அளவில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் குர் ஆனின் ஆரம்ப சொல் முதல் இறுதி சொல் வரை பிழை இல்லாமல் மனப்பாடமாக ஓத தகுதியானவர்களாக உள்ளனர்.இதன் காரணமாக அவ்வப்போது சிலரின் பல முயற்சிகள் செய்தும் குர் ஆனில் எந்த வித மாற்றமும் செய்ய முடியவில்லை. ஆகவே இன்று நம்மிடம் இருக்கும் குர் ஆன் வார்த்தைக்கு வார்த்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முதல் சந்ததியினருக்கு கொடுக்கப்பட்டதே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அவ்வாறே சுன்னத்தும் தலைமுறை தலைமுறையாய் பாதுகாக்கப்பட்டு வருகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த நாட்டின் அனைத்து மக்களும் இப்ராஹிம் (அலை) அவர்களின் சந்ததியினர் ஆவர். இப்ராஹிம் (அலை) அவர்களின் வழி முறைகளை பின்பற்றும்படி நபிகள் நாயகத்திற்கு இறைவனால் கட்டளை இடப்பட்டது.

இப்ராஹீம் (அலை) அவர்களின் பிள்ளைகளுக்கு விட்டு சென்ற சில வழி முறைகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலம் வரை அவ்வாறே பின்பற்றப்பட்டு வந்தன. சில வழி முறைகள் மறக்கப்பட்டு விட்டன. சிலவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டு இருந்தன. நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் மறந்து விட்டதை சொல்லி கொடுத்தார். தவறுகளை சரி செய்தார். இறைவனின் கட்டளைப்படி அதில் கூடுதலாக சிலவற்றை சேர்த்தார். அவற்றை எல்லாம் தன்னை பின்பற்றுபவர்களுக்கு அதை செய்ய உபதேசித்தார். இவை அனைத்தும் சுன்னத் என்று அழைக்கப்படுகிறது. இவற்றில் பெரும்பாலானவை அப்பகுதி மக்களுக்கு குர் ஆன் இறக்கப்படுவதற்கு முன்னரே அறிந்துள்ளனர். ஆகவே இவற்றைப்பற்றி குர் ஆன் குறிப்பிடும் போது ஏற்கனவே தெரிந்த விஷயம் போல் குறிப்பிடுகிறது. ஆகவே இதற்கான முன்னுரையோ , விரிவான விளக்கமோ தேவைப்படவில்லை.

சுன்னத் கூட குர் ஆனைப்போல் நம்மிடம் வந்தடைந்தது. முஸ்லிம்களின் ஒவ்வொரு சந்ததியினரும் செயல் படுத்தி அடுத்த தலைமுறைக்கு கொடுத்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலம் முதல் இன்று வரை தொடர்ச்சியாக இது தொடர்கிறது. நம்பகத்தன்மையின் அடிப்படையில் இன்று நம்மிடம் இருக்கும் குர் ஆனிற்கும் சுன்னத்திற்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை.